RESEARCH ARTICLE

INTERNATIONAL RESEARCH JOURNAL OF TAMIL
சர்வதேசத் தமிழ் ஆய்விதழ்

OPEN ACCESS

DOI: 10.34256/irjt2224s2014

# பெரியபுராணம் காட்டும் குடும்ப உறவு

**க. அருணாபாய்** [அ, *]

[அ] தமிழ்த்துறை, சென்னைப் பல்கலைக் கழகம், சென்னை-600005, தமிழ்நாடு, இந்தியா

# The Family Relationship as shown by Periyapuranam

**K. Arunabai** [a, *]

[a] Department of Tamil, University of Madras, Chennai-600005, Tamil Nadu, India

* Corresponding Author: arunabai1949@gmail.com

Received: 23-06-2022
Revised: 26-09-2022
Accepted: 08-10-2022
Published: 05-11-2022

Check for updates

## ABSTRACT

In Periyapuranam, the 12th Thirumarai, we can see that Sekkizhar has recorded the family relationship of the Nayanmars, their hospitality, their love and charity, the basic ways of life, and the way in which the relationship of the husband, wife, people, and neighbours is shaped. Ilayankudi Mara nayanar is doing service to the devotees along with the family of Ilaiyankudi for the path of love, the Lord makes the world rejoice and performs his blessings. Sekkizhar records that despite the terrible poverty, he did the service of sharing food with his devotees without losing his love. Kunguliya Kalaya Nayanar's devotional service, fragrant incense, has given a detailed message to the Lord. When Nayanar was accompanied by poverty and hunger, on the way to satiate his hunger by selling the Mangal Sutra given by his wife, a man came to meet him with a kunguliyam (Medicinal herbal - Shorea robusta) package, forgetting all his wife, family, and neighbours, and selling Mangal Sutra for the service of kunguliya dhoopam to the Lord with love, he bought kunguliyam. Sekkizhar has recorded that the Lord made his service known to the world and gave him vanpatham (Final Emancipation). Sekkizhar was the one who guided society through family relations about the supremacy of the way of life. The article highlights that the goal is to inculcate in the mind the virtues of giving to others, feeding, and serving God, and living by following a united way of life.

**Keywords:** Periyapuranam, Relationship, Nayanmars, Love

## முன்னுரை

மானிடப் பிறவியின் நோக்கம், வாழ்க்கை நெறிமுறையாகிய, தானம், தர்மம் செய்வோர்கள் அடையும் பயன்கள் ஆகியவற்றின்படி வாழ்ந்து, வாழ்க்கை இன்பங்களை அனுபவித்து, இறைவனை வழிபாடு செய்து, தம் வினைகளை வேறுத்து தத்தம் கடமைகளைச் சரிவரச் செய்து இறுதியில் இறைவனின் திருவடிகளை அடைவதே ஆகும். அதற்காக ஏற்பட்டது தான் “குடும்பம்” என்னும் தெய்வீக அமைப்பாகும். இத்தகைய அமைப்பினைப் பாதுகாக்கும் பொறுப்பு கணவன் - மனைவி ஆகியோரின் கடமையாகும்.

கணவர் தனது கடமைகளை விதிப்படி, ஆற்றுவதற்கு உறுதுணையாக மனைவி பாதுகாத்து, மக்களோடு குடும்பத்தினை நடத்த வேண்டும். ஆதலால்தான் மனைவிக்கு “தர்மபத்தினி” என்ற சிறப்புப் பெயர் உண்டு. ஒரு குடும்பம் சீரும், சிறப்பும், ஐசுவரியமும், சர்வ மங்களமும் நிறைந்ததாக இருக்க வேண்டுமெனில் அதற்கு முக்கிய காரணமாக அமைவது நற்குணங்கள் அமைந்த மனைவியே ஆகும். அதற்கு சற்றேனும் நேர்மாறாக அமைந்துவிடில், குடும்பம் என்னும் தேன் கூடு குலைந்து சிதைந்து விடும்.

வாழ்க்கையில் ஏற்படும் மேடு பள்ளங்களைத் தாங்கிக் கொள்ள பக்க பலமாக மனைவி இருக்க வேண்டும். பொறுமை, நிதானம், சகிப்புத்தன்மை, பிறரை அன்புடன் வரவேற்றல், இனிய பேச்சு ஆகிய நற்குணங்கள் பெண்ணுக்குத் தேவையானதாகும். மனித வாழ்க்கை என்னும் அழகிய பெட்டகத்திலிருந்து எடுக்கப்பட்ட ரத்தினம் தான் மனைவி. மனிதனின் வாழ்க்கையை மலரச் செய்பவள் மனைவியே ஆகும்.

ஒரு குடும்பத்தில் பல உறவினர்கள் இருப்பினும் “மனைவி” என்னும் உறவிற்கு ஈடு இணையாக எந்த உறவையும் கூற முடியாது. ஏனெனில் மனைவி தன்னுடையது என்றிருக்கும் அனைத்தையும் திருமணம் ஆகும்வரை பத்திரமாகப் பாதுகாத்து. அவற்றைத் தனது கணவரது சுகத்திற்காகவே அர்ப்பணித்து விடுகிறாள், தான் வேறு தன் கணவர் வேறு என்று நினைப்பவள் அல்ல ஆதலால்தான் “மனைவி” என்ற உறவுக்கு எந்த வேறு உறவையும் இணையாகக் கூறமுடியாது என்று சான்றோர்கள் கூறியுள்ளனர். ஆயினும் இளையான் குடி மாற நாயனார் புராணத்தில் கணவன் மனைவி எப்படி வாழவேண்டும் என்றும், பசித்தோர்க்கு அமுது படைத்தல் கடமையை எப்படிச் செய்தனர் என்றும், அன்பு வழியில் அடியார்களின் அழிபசி தீர்த்தனர் என்பதனை சேக்கிழார் பெருமானார் பெரிய புராணத்தில் பதிவு செய்துள்ளதைக் காணலாம் (Vellaivaaranam, 1982).

இளையான்குடி மாற நாயனார் தம்மிடத்து எதிர்ப்படும்படியாக வந்த அடியார்களை எக்குலத்தவராயினும் எந்நெறி கொண்டவராயினும், என்பினை ஆரமாகப் பூண்ட இறைவனின் அன்பர்களே என்று எண்ண, அந்த ஒப்பற்றத் தன்மையினை, அவர்களை எதிர்கொண்டு சென்று அழைத்து, கை குவித்து, அவர்கள் திருச்செவியில் நுழையும் தன்மையான அன்பான மொழிகளை இனிமை பெறக் கூறுபவர், எப்போதும் கேட்போர் மகிழும் வண்ணம் பேசுதல் வேண்டும். இதனை திருமூலர் “யாவர்க்குமாம் பிறர்க்கு இன்னுரைதானே” என அருளுகின்றார். அவரது தொண்டு அடியார் பெருமக்களை அமரச்செய்த பின் உணவுகளைப் படைத்திடுவார் அவர்களும் பசியாறி செல்வார்கள்.

அவரது திருத்தொண்டினை, செல்வம் சுருங்கிய போதும், மனம் சுருங்காது, கடன் மேலிட்டு கவலையுறாது அன்பு மேலீட்டால் அடியார் பூசையை நிறுத்தாது செய்வதை, உலகோர் உய்ய வேண்டி, நாயனார் வீட்டிற்கு சிவபெருமான் தவ வேடத்துடன் வந்தார். அந்த நேரம் மழைக்காலம், நடுநிசி காலம், பசியோடு வந்த அடியாரை வரவேற்று, அவருக்கென்று பணிவிடைகள் செய்து அவரை துயர்படுத்தும் ஆராப் பசியைப் போக்குவதற்கான வழிமுறைகளை தன் இனிய மனையாளை வினவினார்.

அவரது மனைவியார், நம்வீட்டில் நமக்கு உணவு முன்னமே இல்லை, பிறரிடம் கடன் பெறலாம் என்றும் இனிக் கடன் கொடுப்பார் யாரும் இல்லை. பொழுதும் போயிற்று, அதனால் செல்வதற்கு இடமும் இல்லை. அதாவது பொழுது சாய்ந்த பின் பிறரிடம் பொருள் கேட்டல் தகாது என்ற செய்தியை இதன் மூலம் அறிகின்றோம்.

அதாவது பசித்துயர் நீங்கும் பொருட்டு இன்று விதைத்த சம்பா நெல்லினை விதைத்ததை நீரில் மூழ்கி முளை விட்டிருக்கும். அந்நெல் முளையை ஒரு கூடையில் வாரிக் கொணர்ந்தார் பின் அறிந்த முறையில் அமுதாக்குவேன் என்றார்.

இதனை சேக்கிழார் பெருமான்,

“செல்லல் நீங்கப் பகல வித்திய செந்நெல்

மல்லல் நீர் முலை வாரி கொடு வந்தால்

வல்ல வாறு அமுது ஆக்கலும் ஆகும்”

என பதிவு செய்துள்ளார் (Nadarasan, 2005).

“விதை நெல்லை அவித்து உண்டது போல” என்பது கொடிய வறுமை. இங்கோ விதை நெல்லோ நாற்றுக்குத் தெளித்த நெல் - அந்நெல்லை வாரிவரின் உணவு சமைப்போம் என்பது தீராக் கொடுமை. அத்தகையச் சூழலிலும் மாறனாரின் விருந்தோம்பும் தன்மை மாறவில்லை. தன் கணவன் செய்யும் திருத்தொண்டிற்கு உதவியாகவும், விருந்தோம்புகின்ற உயர்ந்த பண்பையும் கடைப்பிடித்தார் அவரது

அன்பு துணைவியார். நாயனார் அதேபோல் இருளில் சென்று, முளை நெல்லை, உள்ளத்தில் அன்பான பக்தியைக் கொண்டு கூடையில் வாரிக்கொண்டு வந்து மனைவியிடம் கொடுத்தார் (Sekkilar, 2010).

மனைவியின் திறம் என்னவென்றால் பொருள் ஒன்றேனும் இல்லை என இயம்பிய பிறகு முளைத்த நெல்லைக் கூறி எடுத்துவரச் செய்தார். சேற்றினைக் கழுவிய பின் சமைப்பதற்கு விறகு இல்லை என்றார். நாயனார் அதற்கு கூரையை அறுத்துத் தள்ளியவுடன் அடுப்பில் தீமூட்டி பக்குவமான முறையில் பதமாக வறுத்த பின் அரிசியாக்கி குற்றியெடுத்து சுத்தம் செய்து சோறாக்கிய பின்னர், 'சோறாயிற்று', கறிக்கு என்செய்வோம் என்றார். யாவற்றையும் கற்புடைய அக்காரிகையார் முதலில் கூறாது ஒன்றன்பின் ஒன்றாகக் கூறிய பாங்கினை நினைத்துப் பார்க்க வேண்டும். ஒரு சேரக் கூறின். "இத்துணையும் இல்லையா" என்ற அயர்ச்சி நாயனாருக்குத் தோன்றும். அடுத்தடுத்துக் கூறியதால் "இதுதானே" என சமாளித்தார். பிறகு கறியமுதிற்கு வீட்டின் புறக்கடையில் சென்று குழியினின்றும் வெளி வராத புன்செய் பயிர்களான சிறிய பயிர் கீரைகளைக் கொண்டு வந்து மனைவியாரிடம் கொடுத்தார், இதனை சேக்கிழார்,

"குழி நிரம்பாத புன்செய்க் குறும் பயிர் தடவிப் பாசப்

பழிமுதல் பறிப்பார் போலப் பதித்து அவை கறிக்கு நல்க என்றார்" (Nadarasan, 2005).

பழியாகிய குற்றங்களை விளைவிக்கும் பாச

முதலைக் களைவார் போன்று அக்கீரைகளைக் கொய்து

வந்தவுடன் தம் மனைவியார் அதனை தூய்மைப்

படுத்தி, தன் கைபாகத்தால் பல்வேறு கறிகளை சமைத்து நல்ல

கறியமுதினை செய்து தந்தார்கள்

அடியவராக வந்த இறைவனின் மென்துயில் எழுப்பி, எளிதே உய்யும் வண்ணம் அமுதினை உண்டு பசியாற வேண்டும் என்று மென்மையாகக் கூறி துயில் எழுப்பிட, இறைவன் சோதிப் பிழம்பாய் மேலோங்கி நின்றதென்ன அதிசயம் என இருவரும் திகைத்து நின்றனர். உமையொருபாகன், அடியார்களுக்கு அமுது அளிக்கும் பூசையினைச் சிறிதும் வழுவுறாமல் காத்துப் பேணி வந்த நீ, உன் மனைவியோடும் எம் பேருலகம் நண்ணி இணையில்லா பேரின்பம் பேரிடம் துய்த்து நித்தியமாய் வாழ்வாயாக என்றருளினார். அடியார் மாட்டு அன்பு கொள்பவனே ஆண்டவரிடமும் அன்பாய் இருக்க முடியும் எனவே பெருமானார் மாறனை அன்பனே என அழைத்தருளினார் (Gnanasambandan, 1999).

"அன்பனே அன்பா பூசை

அளித்து" நீ அணங்கினோடும்"

விருந்தோம்பல் வேள்வியில் கணவன் மனைவி ஆகிய இருவருக்குமே சரிசமமான பங்குண்டு என்பதை அறிய முடிகிறது (Nadarasan, 2005).

## இறைத்தொண்டு

திருக்கடவூரில் அவதரித்த கலயனார் சிவனடி பேணும் சிறந்த அன்புடையவர், நல்லொழுக்கத்தில் சிறந்தவர். மார்க்கண்டேயருக்காகக் காலனை காலால் உதைத்த அமிர்த கடேசருக்கு அவரது கருணையை நினைத்து, நறுமணம் கமழும் குங்கிலிய தூபம் இடும் திருப்பணியை, நியதியாகச் செய்து, அவ்விறைவனுக்கே இன்றி ஆலயம் முழுவதும் சூழ்ந்து நின்று மணம் பரப்பிட கலயத்தில் குங்குலியம் இடும் பணியில் தலைப்பட்டு நின்றார். ஆதலால் அவரைக் குங்கிலியக் கலபர் என்றழைத்தனர். அப்பணியை ஏற்கும் அமிர்த கடேசரின் திருவருளால் செல்வம் குறைய, வறுமை வந்தடைந்த பின்னும் தங்கள் தலைவராகிய சிவபிரானுக்குத் தாம் செய்து வந்த அக்குங்குலியப் பணியினைக் குறைவுறாது செய்து வந்தார்.

வறுமை வந்துற்றபோது தன்னிடமிருந்த தனங்கள், பொருள்கள் நிலங்கள், அடியாட்கள் எல்லவற்றையும் விற்று திருத்தொண்டினை குறைவுராது செய்து வந்தார். இச்செயலால் மனைவி, மக்கள், சுற்றத்தாரும் உணவின்றி பசியால் இரண்டு நாட்கள் பட்டினி கிடந்து அல்லல் பட்டனர். அதனைத் தீர்க்க கணவன் மீது நல் அன்பு கொண்ட மனைவியால் தன் திருமாங்கல்யத்தை கழட்டிக் கொடுத்து, அதனை விற்று நெல் வாங்கி வரச்சொன்னார். கணவருடன் வாழும் மகளிரை சுமங்கலிப் பெண் என அழைப்பதும் கணவன் இறந்தால் மட்டும் தனித்து வாழ்வாரை "கைம்பெண்" என்றும் அழைப்பது நம் மரபே. அம்முறையில் சுமங்கலியாக வாழ்வார் என்றும் தாலியை கழட்ட மாட்டார்கள் இதுவே வறுமையின் எல்லையாகும்.

குங்குலியக் கலய நாயனார் கடைவீதி செல்லும் போது எதிரில் ஒரு வணிகன் குங்குலியப் பொதியைக் கொண்டு வருவதைக் கண்டு, மனம் மகிழ, இதன் விலையாக, இந்த மாங்கல்யத்தை விற்றுவிட்டுத் தருகிறேன் என குங்குலியப் பொதியை வாங்கி வந்தார். அமிர்தகடேசருக்குத் திருத்தொண்டாற்ற குங்குலிய தூபம் போட்டு, கதிரவனைக் கண்ட கமலம் போல் 'சிவ சிந்தனையுடன் அங்கேயே தங்கிவிட்டார்'. இவருடையத் தொண்டினை இறைவன் ஏற்றுக்கொண்டு, அன்றிரவு குபேரன் மூலம் நெல் குவியல் பொற்குவியல் அனைத்துச் செல்வங்களையும் நாயனாரின் வீட்டில் குவித்து, அவரது துணைவியாருக்கு கனவில் தோன்றி, நடந்திருப்பதைக் காணச் செய்தார். மனைவி, உடன் எழுந்து பார்த்து, இறைவனின் திருவருளை எண்ணி, கைகளை கூப்பி வணங்கி, தம் அன்பு கணவனுக்கு திருவமுது செய்யலானார்.

நாயனார்க்கு இறைவன் அசரீரியாக, நீ விரைந்து வீடு சென்று பசியாற்ற பாலோடு கூடிய நல்லுணவு உண்பாயாக என அருளினார். அவர் தன் வீடு சேர்ந்து நடந்த அதிசயத்தை மனைவி மூலம் அறிந்து, நீலகண்டப் பெருமானின் திருவருளை நினைத்து எளியேனையும் ஆண்டருளிய விதத்தினை உணர்ந்து அடிசிலை உண்டார். குடும்பமும், நாயனாரும் வானுலகம் அடைந்தனர். உலகில் நிறைந்த செல்வம் பெற்ற பண்பினில் உயர்ந்தார்.

## முடிவுரை

சேக்கிழார் பெருமானார் இத்தகைய உறவு முறைகளையும், வாழ்க்கை நெறியான அன்பு நெறி, பக்தி நெறி ஆகியவற்றின் மூலம் சமுதாயத்திற்குப் பயன் தரும் வகையில் பதிவு செய்துள்ளார், அவற்றில் நாயன்மார்களின் நெறி வாழ்க்கை முறைகளைக் காண்பதே இக்கட்டுரையின் நோக்கம் அதன் மூலம் குடும்ப உறவுகளைப் பேணிப் பாதுகாத்தல், கடமையாகும், இளைய தலைமுறையினர்கள் நன்னெறி நிற்கவும், பிறர்க்கு உதவும் மனப்பான்மையும், இறைவழிபாட்டில் மனதை செலுத்தி முன்னேறவும் குடும்பம் ஒரு தூணாக உள்ளது. உறவுகள் இல்லாத வாழ்க்கை திக்குத் தெரியாத நடுக்கடலில் சிக்குண்ட கப்பலைப் போன்றது. உறவுகள் தான் வாழ்க்கைக்கு கலங்கரை விளக்கம் போல் வழிகாட்டி, அக்கப்பலை கரைவந்து சேர்வதற்கு உதவுகின்றது. நாயன்மார்களின் இல்லற வாழ்க்கை முறை குடும்ப உறவுகளை முன்னே வைத்து, வாழ்க்கையின் அர்த்தத்தை எல்லோரும் புரிந்துகொண்டு, பயனடையவும் உதவுகிறது. இத்தைகைய கருத்தினை, சேக்கிழார் பெருமானார், விழிப்புணர்வை எதிர்கால இளையத் தலைமுறையினர்களுக்கு வித்திட்டுள்ளார். "விதைத்தவன் உறங்கினாலும் விதைகள் என்றும் உறங்குவதில்லை" என்பதை மனதில் கொண்டு சமுதாயத்தை நல்வழிக்குச் சரியான பாதையை வகுக்கும் என்பதே முடிவாகும்.

## References

Gnanasambandan, A.S. (1999) Periya Puranam oor aaivu, Gangai Puthaka Nilayam, Chennai, India.

Nadarasan, (2005) Periya Puraanam Moolamum Uraiyum, Uma Pahippagam, Chennai, India.

Sekkilar, (2010) Periya Puranam, Vol 4, Guhashri Vaariyaar Pathippagam, Chennai, India.

Vellaivaaranam, T.M. (1982) Periya Puranam, Kasimadam, Thirupanandhal, Tamil Nadu, India.

**Funding:** No funding was received for conducting this study.

**Conflict of Interest:** The Author has no conflicts of interest to declare that they are relevant to the content of this article.

**About the License:**

Attribution 4.0 International (CC BY 4.0)

© The Author 2022. The text of this article is licensed under a Creative Commons Attribution 4.0 International License